Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

## Questions:

### Maps

1.இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
1. பம்பாய்
2. கல்கத்தா
3. சென்னை
4. அகமதாபாத்
5. லக்னோ
6. கான்பூர்
7. சூரத்
8. லாகூர்
9. பூனா
10. அலகாபாத்

### 5 Marks

2.பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

3.இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

4.இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக.

### 3 Marks

5.1853 இல் இந்தியச் சீர்திருத்தக் கழக தலைவரின் சென்னை வருகையைக் குறித்து நீ அறிந்தது என்ன?

6.பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.

7.பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?

8.மே 1884இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்கவிழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக.

9.இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.

### 2 Marks

10.தேசியம் என்றால் என்ன?

11.அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.

12.இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.

13.இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியலைத் தயார் செய்க.

14.தொடக்க கால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.

### Multiple Choice Question

15.காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
(a) 1915 (b) 1916 (c) 1917 (d) 1918

16.இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
(a) 1825 (b) 1835 (c) 1845 (d) 1855

17.மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.
(a) வில்லியம் ஜோன்ஸ் (b) சார்லஸ் வில்கின்ஸ் (c) மாக்ஸ் முல்லர் (d) அரவிந்தோ கோஷ்

18."சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" – எனக் கூறியவர்:
(a) பாலகங்காதர திலகர் (b) தாதாபாய் நௌரோஜி (c) சுபாஷ் சந்திர போஸ் (d) பாரதியார்

19.பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | |
|---|---|
| (அ) பாலகங்காதர திலகர் | 1. இந்தியாவின் குரல் |
| (ஆ) தாதாபாய் நௌரோஜி | 2. மெட்ராஸ் டைம்ஸ் |
| (இ) மெக்காலே | 3. கேசரி |
| (ஈ) வில்லியம் டிக்பை | 4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் |

(a)

| A | B | C | D |
|---|---|---|---|
| 2 | 4 | 1 | 3 |

(b)

| A | B | C | D |
|---|---|---|---|
| 3 | 1 | 4 | 2 |

(c)

| A | B | C | D |
|---|---|---|---|
| 1 | 3 | 2 | 4 |

(d)

| A | B | C | D |
|---|---|---|---|
| 4 | 2 | 3 | 1 |

20.பின்வருவனவற்றுள் எது சரியாகப் பொருந்தியுள்ளது?
(a) ஆங்கிலக் கல்விச் சட்டம் - 1843 (b) அடிமைமுறை ஒழிப்பு - 1859 (c) சென்னைவாசிகள் சங்கம் - 1852 (d) இண்டிகோ கலகம் - 1835

21.பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான கால வரிசையைத் தேர்வு செய்க.
(i) கிழக்கிந்தியக் கழகம்
(ii) சென்னை மகாஜன சங்கம்
(iii) சென்னைவாசிகள் சங்கம்
(iv) இந்தியச் சங்கம்
(a) ii, i, iii, iv (b) ii, iii, i, iv (c) iii, iv, i, ii (d) iii, iv, ii, i

22.இந்திய தேசியக் காங்கிரஸை நிறுவியவர் _____.
(a) சுபாஷ் சந்திர போஸ் (b) காந்தியடிகள் (c) A.O. ஹியூம் (d) பாலகங்காதர திலகர்

23.இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர் _____.
(a) சுரேந்திரநாத் பானர்ஜி (b) பத்ருதீன் தியாப்ஜி (c) A.O. ஹியூம் (d) W.C. பானர்ஜி

24."இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்_____.

(a) பாலகங்காதர திலகர் (b) M.K. காந்தி (c) தாதாபாய் நௌரோஜி (d) சுபாஷ் சந்திர போஸ்

25.கூற்று: ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
காரணம்: இங்கிலாந்தின் தடையற்ற வணிகக் கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது.
(a) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை (b) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது (c) கூற்று சரி. காரணம் தவறு
(d) கூற்று காரணம் இரண்டும் தவறு

26.ஒரிசா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை/எது?
கூற்று 1: 1866ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர்.
கூற்று 2: பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது.
கூற்று 3: ஒரிசா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ளத் தூண்டியது.
(a) 1, 2 (b) 1, 3 (c) இவற்றுள் எதுவுமில்லை (d) இவை அனைத்தும்

27.காந்தியின் அரசியல் குரு என்று அழைக்கப்படுபவர் யார்?
(a) ஜின்னா (b) நேரு (c) கோகலே (d) சுபாஷ்

28.தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் எதை பற்றி தனது வாழ்வின் முழுவதும் ஆய்வைத் தொடங்கினார்?
(a) வறுமைப்பற்றி (b) விடுதலைப்பற்றி (c) தொழிற்புரட்சி பற்றி (d) இவற்றில் எதுவும் இல்லை

29.இந்தியாவில் ஆங்கிலம் எப்போது அறிமுகம் செய்யப்பட்டது?
(a) 1935 (b) 1980 (c) 1835 (d) 1947

30.1828 - இல் ராஜா ராம்மோகன் ராய் தொடங்கிய இயக்கம் எது?
(a) ஆரியசமாஜம் (b) பிரம்மசமாஜம் (c) பிராத்தனசமாஜம் (d) இவற்றில் எதுவும் இல்லை

31.கூற்று:தாதாபாய் நௌரோஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக மூன்று முறை தேர்வு செய்யப்பட்டார்.
காரணம்:1905 ஆம் ஆண்டு வரையில் இந்திய விடுதலை இயக்கம் மிதவாத தேசியவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.
(a) கூற்று காரணம் இரண்டும் சரி,காரணம் கூற்றை விளக்குகிறது. (b) கூற்று காரணம் இரண்டும் சரி,ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(c) கூற்று சரி ஆனால் காரணம் தவறு. (d) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

32.சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.
பொருத்துக.
1. இண்டிகா காலம் - i.1857
2.ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் - ii. சிலோன்
3.டெல்லி முற்றுகை - iii.1952
4.சென்னைவாசிகள் சங்கம் - iv.1859
(a) I ,II ,III,IV (b) IV ,II ,I ,III (c) II ,I ,IV ,III (d) III,II ,I ,IV

33.கூற்று: இந்திய தேசிய காங்கிரஸைச் சேர்ந்த தொடக்ககாலத் தலைவர்கள் சமூகத்தின் உயர்குடிப் பிரிவைச் சேர்ந்தோர் ஆவர்.
காரணம்: வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் போன்றோர் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.
(a) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது. (b) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(c) கூற்று சரி ஆனால் காரணம் தவறு (d) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

34."இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும் '(Poverty and Un-British Rule in India) என்ற நூலை எழுதியவர்_____.
(a) பால கங்காதர திலகர் (b) கோபால கிருஷ்ண கோகலே (c) தாதாபாய் நௌரோஜி (d) எம்.ஜி. ரானடே

QB TM 365 Study Material
QUESTION BANK 365